**தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–6**

**ந.க.எண்.40785/எம்/இ2/2013. நாள் 11.07.2013**

**பொருள்:–** பள்ளிக் கல்வி– பள்ளிக்கல்வித்துறை சார்பாக பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளை அனைத்து பள்ளிகளிலும் கொண்டாடுதல்– சார்பு.

**பார்வை:–** அரசாணை (நிலை) எண்:169,பள்ளிக்கல்வி (என்)துறை, நாள்:06.07.2012.

----------

பார்வையிற் காண்ட கடிதத்தின்படி ஆண்டுதோறும் ஜூலை 15–ஆம்நாள் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாள் விழா அரசு விழாவாக அனைத்துப் பள்ளிகளிலும் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வாண்டும் அதேபோல் அனைத்து பள்ளிகளிலும் 2013 ஜூலை 15 அன்று பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாள் விழாவினை அரசு விழாவாக கொண்டாடும் பொருட்டு மாணவர்களிடையே பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பெருமையைப் பற்றியும், அவர்களின் புகழ்பாடும் வகையிலும் மாணவர்களிடையே போட்டிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தி விமரிசையாக அனைத்துப் பள்ளிகளிலும் கொண்டாட உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் அறிவிக்கலாகிறது.

பள்ளிகளில் இவ்விழா கொண்டாடப்பட்ட விவரத்தினை தொகுத்து அறிக்கையாக அரசுக்கு அனுப்பிவைக்க ஏதுவாக இவ்வியக்ககம் அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் அறிவிக்கலாகிறது.

ஒம்./– கு. தேவராஜன்.
பள்ளிக் கல்வி இயக்குநர்.